செய்தி வெளியீடு எண்–677 நாள் :11.8.2010

# நீதியரசர் கோவிந்தராசன் குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்களின் பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

பள்ளிக் கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்து அமைக்கப்பட்ட நீதியரசர் கோவிந்தராசன் குழு 10–8–2010 வெளியிட்ட செய்தி வெளியீடு பற்றி ஒருசில பள்ளி நிர்வாகிகளும், பெற்றோர்களின் பிரதிநிதிகளும் எழுப்பியுள்ள சில அய்யப்பாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இந்த செய்தி வெளியிடப்படுகிறது.

உதாரணமாக நீதிபதி கோவிந்தராசன் அளித்துள்ள செய்தியில் – "மேல் முறையீடு செய்துள்ள பள்ளிகளுக்கு, நிர்ணயம் செய்து முடிவெடுக்கப்படும் புதிய கட்டணத்தை 2011–2012ஆம் கல்வி ஆண்டில் நடைமுறைப்படுத்தலாம் என குழுவினால் முடிவெடுக்கப் பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. "இந்து" நாளிதழ் தனது தலைப்பில் "New Fee structure only from next year" என்று வெளியிட்டு விட்டு, உள்ளே செய்தியில் – "The School Education Department has withdrawn its decision to regulate the fees collected by private schools across the State this academic year" - அதாவது மாநிலம் முழுவதும் உள்ள தனியார் பள்ளிகள் இந்த ஆண்டுக்கான கட்டணத்தை ஒழுங்குபடுத்துவது குறித்து பள்ளிக் கல்வித் துறை எடுத்த முடிவினை திரும்பப் பெற்றுக் கொள்கிறது – என்று எழுதியுள்ளது. வேறு சில ஏடுகளிலும் இது பற்றி சில அய்யப்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. அவர்களுக்காக இந்த விளக்கம் தரப்படுகிறது.

கல்விக் கட்டணத்தை குழு நிர்ணயம் செய்து அறிவித்தது மிகவும் குறைவு என்று கூறி, அதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று 6400 மனுக்கள் குழுவிடம் வந்துள்ளன. அதே நேரத்தில் மாணவர்களும், ஆசிரியர் களும், பெற்றோர்களும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதிலும் அரசு அக்கறையாக உள்ளது.

எனவே இந்தக் குழு இந்தப் பள்ளிகளையெல்லாம் நேரடியாக ஆய்வு செய்து – பள்ளிகளையெல்லாம் தர நிர்ணயம் செய்து அதன் அடிப்படை யில் கட்டணத்தை நிர்ணயம் செய்ய எண்ணியுள்ளது. அதற்கு சற்றுக் கால தாமதம் ஆகும் என்பதால், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்குப் பதிலாக மீண்டும் ஆய்வு செய்து அறிவிக்கப்படும் புதிய கட்டணத்தை 2011–2012 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தலாம் என்றும் –

இந்தக் கல்வி ஆண்டினைப் பொறுத்தவரையில் – நீதியரசர் கோவிந்த ராசன் குழுவினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கல்விக் கட்டணமே பொருந்தும். இதையும் நீதியரசர் கோவிந்தராசன் நேற்றையதினம் செய்தி யாளர்களிடம் கூறும்போது, “மேல் முறையீடு செய்துள்ள பள்ளிகளுக்கு கடந்த மே மாதம் என்ன கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதோ, அதையே அந்தப் பள்ளிகள் வசூலிக்க வேண்டும்” என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

* * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9